*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 519/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திரு.ராஜா த/பெ. குப்புசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25.06.2025.**

துவக்க நேரம் 12.20 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது 74 கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 28.09.2023 அன்று எனது வீட்டிலிருந்து எனது இருசக்கர வாகன பதிவு எண்.TN77Q6333 என்ற வாகனத்தில் எனது விவசாய நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சிவிட்டு, திரும்பி எனது வீட்டிற்கு வரும்வழியில், இரவு சுமார் 08.30 மணியளவில் ராமர் வீட்டிற்கு முன்பாக ராமர், ஜெயக்குமார், சக்தி (எ) சக்திவேல் ஆகிய மூன்று பேரும், என்னை பார்த்து தேவடியா பைலே, நாதேரி பயலே என்று கெட்ட வார்த்தையால் திட்டினார்கள்.

2) எதிரி ஜெயக்குமார் கத்தியால், எனது இடதுபக்க மண்டை மற்றும் பின்பக்க தலையில் வெட்டி, என்னை அடித்தார். ராமர், என் கையை பின்னால் பிடித்து இழுத்து என்னை எங்கும் நகரமுடியாமல் தடுத்தார். சக்தி (எ) சக்திவேல் கம்பியால், எனது இடதுபக்க முழங்கைக்கு அருகில் தாக்கியதில் எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. (எதிரி சாட்சியம் அளிக்கும்பொழுது, தனது கையை காண்பித்து எலும்பு முறிவு ஏற்பட்ட இடத்தை குறிப்பிட்டு காட்டினார், மேலும் தனக்கு தலையில் ஏற்பட்ட காயங்களையும் காட்டி சாட்சியம் அளித்தார்).

3) மேலும் ஆஜர் எதிரிகள் மூவரும், என்னை பார்த்து இன்னிக்கு நீ தப்பிச்சிக்கிட்டடா என்னைக்கா இருந்தாலும் உன்ன முடித்துகட்டாம விடமாட்டோம் என்று கூறினார்கள்.

4) பின்னர் எனது இருசக்கர வாகனத்தை, எதிரிகள் அனைவரும் அடித்து நொறுக்கி சேதப்படுத்திவிட்டார்கள். அக்கம் பக்கம் இருந்தவர்கள், எனது வீட்டிற்கு தகவல் கொடுத்து, எனது அப்பா வந்து, என்னை காரில் அழைத்துவந்து ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். அங்கு நான் உள்நோயாளியாக 17 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன்.

5) நடந்த சம்பவத்தை குறித்து ஆத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து, கெங்கவல்லி காவல் நிலைய போலிசார், என்னிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

## குறுக்கு விசாரணை

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 12.33 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.06.25 15:34:03 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 519/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-6)***

*Name / Father's Name:* ***திரு.ஜெயசுதன் த/பெ. சுந்தரராஜன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25.06.2025.**

துவக்க நேரம் 12.34 A.N

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது 74 கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் கெங்கவல்லி காவல் நிலையத்திற்கு சொந்த வேலையாக சென்றபொழுது, வழக்கு தரப்பினர்களுக்கு இடையே சண்டை நடந்தது சம்மந்தமாக போலிசார் என்னிடம் ஒரு கையெழுத்து போடச்சொல்லி கேட்டார்கள். அதனால் நான் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **(பார்வை மகஜரிலுள்ள 1வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

ஆஜர் எதிரிகள், எனது ஊர்க்காரர்களா என்றால் ஆமாம். கடந்த 30.09.2023ம் தேதி காலை 09.00 மணியளவில் நானும், மணி என்பவரும் எங்கள் ஊரைச்சேர்ந்த ஜெயக்குமார் என்பவரின் வீட்டின் அருகே சென்றுகொண்டிருந்தபொழுது, அங்கு கெங்கவல்லி போலிசார் எங்கள் ஊரைச்சேர்ந்த ராஜா என்பவரை சிலர் வழிமறித்து அடித்து, அவரது வாகனத்தை சேதப்படுத்தியதாக சொல்லி சம்பவயிடத்தை பார்த்து படம் வரைந்து, எழுதிக்கொண்டதற்கு சாட்சியாக என்னிடம் கையெழுத்து போடச்சொன்னதால் நான் சம்பவயிடத்தில் கையெழுத்து போட்டேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்பொழுது முதல் விசாரணையில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக, ஆஜர் எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 12.43 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.06.25 15:34:10 +0530

Judicial Magistrate No.2, Attur.